

கழகத் தலைவர், எதிர்கட்சித் தலைவர் ஆகியோர் ஆணைக்கினங்க, விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளர், சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் விழுப்புரம், முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், விழுப்புரம் சட்டமன்றத் தொகுதி, கோலியனூர் ஊராட்சி ஒன்றியம், அரசமங்கலம், சேர்ந்தனூர், தென்குச்சிப்பாளையம் ஆகிய பகுதிகளை சேர்ந்த மரம் வெட்டும் தொழிலாளர்கள் 20 பேர் வாகன விபத்துக்குள்ளானதை அறிந்து, நேரில் சென்று உடல் நலம் குறித்து விசாரித்து, ஆறுதல் கூறி, மருத்துவர்களிடம் உரிய சிகிச்சை அளிக்க அறிவுறுத்தினார்.

# சட்டப்பேரவையில் ஜி.ஆர்.வசந்த வேலு பேச்சு!

7 ஆம் பக்கத் தொடர்ச்சி

**தார்ச் சாலை அமைத்திடுக!**

உளுந்தூர்பேட்டை தொகுதி. கருவேப்பிலைபாளையம் ஊராட்சியை திருவெண்ணெய்நல்லூர் தாலுகாவிலிருந்து பிரித்து உளுந்தூர்பேட்டை தாலுகாவில் இணைக்க வேண்டும். மதியனூர் முதல் நல்லாளகுப்பம் வரை உள்ள ஊராட்சி ஒன்றிய சாலையை தார்ச்சாலையாக அமைத்துத் தர வேண்டும்.

உளுந்தூர்பேட்டை தொகுதி, ஆரிநத்தம் ஊராட்சி, நல்லாளகுப்பம் ஆதிதிராவிடர் பகுதிக்கு ஆழ்துளைக் கிணறு மற்றும் மின் மோட்டாருடன்கூடிய 30000 லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர வேண்டும். பொய்கை அரசூர் கிராமத்தில் உள்ள தரைப்பாலத்தை மேம்பாலமாக கட்டித்தர வேண்டும்.

உளுந்தூர்பேட்டை தொகுதி, சேந்தமங்கலம் முதல் எலவத்தடி வரை உள்ள ஒருவழி தார்ச்சாலையை இருவழி தார்ச் சாலையாக மாற்றித் தர வேண்டும்.

எறையூர் அதையூர் சாலையில் உள்ள பழுதடைந்த பாலத்தினை அகற்றி புதிய பாலம் அமைத்து தர வேண்டும்.

உளுந்தூர்பேட்டை முதல் திருவெண்ணெய்நல்லூர் வரை செல்லும் நகரப் பேருந்தை ஒட்டனந்தல் கிராமம் வரை நீட்டிக்க வேண்டும். மலட்டாறு கரையேரத்தில் உள்ள அரசூர், தென்மங்கலம், இருவேல்பட்டு, காரப்பட்டு, ஆலங்குப்பம், கண்ணாரம்பட்டு, மேல்தனியாலம்பட்டு, பொய்கைஅரசூர் ஆகிய கிராமங்களில் மலட்டாறு கரையோரம் தடுப்புச் சுவர் அமைத்துத் தர வேண்டும்.

உளுந்தூர்பேட்டை தொகுதி, வேலூர் ஊராட்சி அருகில் நிலத்தடி நீரை மேம்படுத்த கெடிலம் ஆற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை அமைத்துத் தர வேண்டும். கிழக்கு மருதூர்

ஊராட்சிப் பகுதியில் கெடிலம் ஆற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை அமைத்துத் தர வேண்டும். ஊடையாநந்தல் ஊராட்சி பகுதியில் கெடிலம் ஆற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை அமைத்துத் தர வேண்டும். சேந்தமங்கலம் ஊராட்சிப் பகுதியில் சேதமடைந்த தடுப்பணையைப் புதுப்பித்து உயரத்தை அதிகரித்துத் தர வேண்டும்.

உளுந்தூர்பேட்டை தொகுதி, சித்தானங்கூர் ஊராட்சி, மாமாந்தூர் களர் கிராமத்தில் உள்ள சித்தேரியை புனரமைத்துத் தர வேண்டும். பிள்ளை யார்குப்பம் கிராமத்தில் தடுப்புச் சுவர் அமைத்துத் தர வேண்டும். மல்லிகா கிராமத்தில் தடுப்புச் சுவர் அமைத்துத் தர வேண்டும்.

உளுந்தூர்பேட்டை தொகுதி, கண்ணாரம்பட்டு கிராமத்தில் உள்ள தரைப்பாலத்தை மேம்பாலமாக கட்டித்தர வேண்டும். உளுந்தூர்பேட்டை தொகுதி படித்த இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெறும் வகையில் பேப்பர் தொழிற்சாலை ஒன்று அமைத்துத் தர வேண்டும்.

உளுந்தூர்பேட்டை தொகுதி, திருநாவலூரில் அமைந்துள்ள அரசு மேல்நிலைப் பள்ளிக்கு மாணவியர்களுக்கென்று தனியாக தங்கும் விடுதி அமைத்துத் தர வேண்டும். வேலூர் கிராமத்தில் அரசு மாதிரிப் பள்ளிக்கு அருகில் மாணவர்களுக்கு தங்கும் விடுதி ஒன்றை அமைத்துத் தர வேண்டும்.

உளுந்தூர்பேட்டை தொகுதி, மன்னார்குடி ஊராட்சியில் அமைந்துள்ள தொடக்கப் பள்ளிக்குச் செல்ல பாதை மற்றும் கழிவறை வசதிகள் அமைத்துத் தர வேண்டும். மாமந்தூர் ஊராட்சியில் அமைந்துள்ள நடுநிலைப் பள்ளிக்கு கற்றுச்சுவர் மற்றும் கழிவறை வசதி அமைத்துத் தர வேண்டும். செம்மணங்கூர் ஊராட்சியில் உள்ள அரசு ஆதிதிராவிட நல தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக தாமுயர்த்தித் தர வேண்டும். அதையூர் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறை கட்டடம் அமைத்துத் தர வேண்டும்.

உளுந்தூர்பேட்டை தொகுதி, கூ.கள் எக்குறிச்சி ஊராட்சி, நல்லாளக்குப்பம் கிராமத்தில் புதிய அங்கன்வாடி கட்டடம் அமைத்துத் தர வேண்டும். நல்லாளக் குப்பம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு ஆழ்துளைக் கிணறு, கழிவறை மற்றும் சுற்றுச்சுவர் அமைத்துத் தர வேண்டும்.

உளுந்தூர்பேட்டை உணவுப்பொருள் வட்ட வழங்கல் அலுவலகத்திற்கு புதிய கட்டிடம் அமைத்துத் தர வேண்டும்.

உளுந்தூர்பேட்டை தொகுதியில் சிதிலமடைந்த நிலையில் உள்ள கிளைச் சிறையை இடமாற்றம் செய்து புதிய கிளைச் சிறை அமைத்துத் தர வேண்டும். உளுந்தூர்பேட்டையில் பொதுப் பணித் துறை (கட்டடம்), உதவிப் பொறியாளர் அலுவலக கட்டடம் அமைத்துத் தர வேண்டும்.

உளுந்தூர்பேட்டை தொகுதி, கூவாகம் ஊராட்சியில் கூத்தாண்டவர் கோவில் சுற்றுலாத் தலமாக அறிவிக்கப் பட்டுள்ள நிலையில், அக்கோவிலுக்குத் தேவையான குடிநீர், கழிவறை, தங்கும் விடுதி, பேருந்து வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகளை ஏற்படுத்த வேண்டும். கூவாகம் ஊராட்சி, பாரதி நகரில் வசித்து வரும் இலங்கையைச் சேர்ந்த சுமார் 100 தமிழர் குடும்பங்களுக்கு வீட்டு மனைப் பட்டா மற்றும் குடியிருப்பு அமைத்துத் தர வேண்டும்.

உளுந்தூர்பேட்டை தொகுதி, சரவணப்பாக்கம் மற்றும் ஆணைவாரி ஊராட்சிகளில் புதிதாக நியாய விலைக் கடை கட்டடங்கள் அமைத்துத் தர வேண்டும். சேந்தநாடு, கெடிலம், செங்குறிச்சி, எறையூர், A.குமாரமங்கலம், திருபெயர், பிடாகம் போன்ற இடங்களில் விவசாய சேமிப்புக் கிடங்குகள் கட்டித்தர வேண்டும்.

உளுந்தூர்பேட்டை தொகுதி, ஆனத்தூர் ஊராட்சி, மேல்தனியாலம்பட்டு கிராமத்தில் புதிய நியாய விலைக் கடை அமைத்துத் தர வேண்டும். கிராமம் ஊராட்சியில் உள்ள சாராய மேடு பகுதியில் இயங்கி வரும் நியாய விலைக் கடைக்கு புதிய கட்டிடம் அமைத்துத் தர வேண்டும்.

உளுந்தூர்பேட்டை தொகுதி, கிரிமேடு ஊராட்சியில் மணல்மேடு பகுதிக்கு புதிய நியாய விலைக் கடை மற்றும் கட்டடம் அமைத்துத் தர வேண்டும். திருவெண்ணெய்நல்லூர் ஊராட்சி, கண்ணாரம்பட்டு ஆதிதிராவிடர் பகுதிக்கு பகுதிநேர நியாய விலைக் கடை மற்றும் புதிய கட்டடம் அமைத்துத் தர வேண்டும்.

உளுந்தூர்பேட்டை தொகுதி, தென்மங்கலம் ஊராட்சி ஆதிதிராவிடர் பகுதியில் புதிய நியாய விலைக் கடை மற்றும் புதிய கட்டடம் அமைத்துத் தர வேண்டும். மாமந்தூர் ஊராட்சி, களர் கிராமத்திற்கு அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைத்துத் தர வேண்டும். அங்கனூர் ஊராட்சியில் அரசு நேரடி நெல் கொள் முதல் நிலையம் அமைத்துத் தர வேண்டும்.

உளுந்தூர்பேட்டை தொகுதி, சேந்தநாடு ஊராட்சியில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையமாக தர முயர்த்தி, தேவையான கட்டட வசதி செய்து தர வேண்டும்.

உளுந்தூர்பேட்டை தொகுதிக்குட்பட்ட மட்டிகை ஏரியை ஆழப்படுத்திட வேண்டும். மேலும், நிரந்தரமாக ரெகுலேட்டர் உடன்கூடிய தடுப்பணை ஒன்றை நரி ஓடையில் அமைத்துக் கொடுக்க வேண்டும்.

உளுந்தூர்பேட்டை தொகுதியில் பொதுப் பணித் துறைக்கு சொந்தமான 50 பாசன ஏரிகளை ஆழப்படுத்துவதுடன், வரத்து வாய்க்கால்களையும் மதகுகளையும், சீரமைத்துத் தர வேண்டும்.

உளுந்தூர்பேட்டை தொகுதி, திருநாவலூர் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை வட்டம் சாராத அரசு மருத்துமனையாக தரமுயர்த்த வேண்டும்.

இவ்வாறு ஜி.ஆர். வசந்த வேலு பேசினார்.

---

சுயமரியாதையின் வடிவம் – தியாகத்தின் உருவம்

# வ.உ.சி.யின் புகழைப் போற்றுவோம்!

## சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் – சமூக வலைதளப் பதிவு!

சென்னை, செப். 6-

‘கப்பலோட்டிய தமிழர்’ வ.உ.சிதம்பரனார் அவர்களின் பிறந்த நாளையொட்டி சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விடுத்த சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

விடுதலைப் போராட்ட வீரர் கப்பலோட்டிய தமிழர் வ.உ.சிதம்பரனார் அவர்களின் பிறந்த நாள் இன்று.

விடுதலைப்போரில் பங்கேற்று சிறையில் செக்கிழுத்த செம்மல்.

ஆங்கிலேயர்களுக்கு எதிராக ‘சுதேசி’ கப்பல் விட்ட பெருமைக்குச் சொந்தக்காரர்.



சுயமரியாதையின் வடிவமாகவும் மற்றும் தியாகத்தின் உருவமாகவும் வாழ்ந்து மறைந்த வ.உ.சி. அவர்களின் புகழைப் போற்றுவோம்!

இவ்வாறு அப்பதிவில், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

# கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்,எல்,ஏ. அறிக்கை!

கள்ளக்குறிச்சி, செப்.6-

கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன் அறிக்கை விடுத்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் கூறியிருப்பதாவது,

கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழக செயற்குழு ஆலோசனைக் கூட்டம் இன்று (06.09.2026 - ஞாயிற்றுக்கிழமை) காலை 9.00 மணி யளவில் தியாகதுருகம் சாலையில் உள்ள கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட



கழக அவைத்தலைவர் கே.ராமமூர்த்தி தலைமையில், தலைமை கழக பிரதிநிதிகள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர். டி.அரசு, கே.பி.சங்கர் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு கருத்துரை வழங்க உள்ளனர்.

அதுசமயம் கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாநில, மாவட்டக்கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், அனைத்து சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் இளைஞரணியின் துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமென அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்:

1. 22082026 அன்று அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற தலைமைச் செயற்குழுக் கூட்டத்தில், கழக நிர்வாக சீரமைப்பு தீர்மானத்தின்படி ஒன்றிய, நகர,பேரூர் கழக மறுசீரமைப்பு குறித்து,

2. செப் 15 அண்ணா அறிவாலத்தில் நடைபெறும் கழக முப்பெரும் விழா குறித்து,

3. கழக ஆக்கப்பணிகள் குறித்து ஆலோசிக்கப்பட உள்ளது,

இவ்வாறு அறிக்கையில் மாவட்ட கழக செயலாளர் வசந்தம் க. கார்த்திகேயன் எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.

---

டி.யு.சி.எஸ். திராவிட தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் சார்பில்

# டி.யு.சி.எஸ். நிர்வாகச் சீர்கேட்டைக் கண்டித்து கண்டனக் கூட்டம்!

## சுந்திரமூர்த்தி தலைமையில் இராஜன் சாமிநாதன் முன்னிலையில் நடைபெற்றது!

சென்னை, செப்.6-

பழம் பெருமைமிக்க சென்னை டி.யு.சி.எஸ். என அனைவராலும் அழைக்கப்படும் திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு பண்டக சாலை என்பது 1904ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தியாவின் முதலாவது நுகர்வோர் கூட்டுறவு சங்கமாகும். சென்னை மக்களுக்கு ரேஷன் பொருள்கள், மளிகை பொருள்கள், எரிவாயு சிலிண்டர், பெட்ரோல் மற்றும் டீசல், காய்கறி, மருந்துகள் என அனைத்து வகைகளிலும் தனது கிளைகள் ரேஷன் கடைகள் 251, எரிவாயு கிளைகள் 12, மருந்து கிளைகள் 10, முதல்வர் மருந்தகம் 1, பண்ணை பசுமை கடைகள் 5, மளிகை பிரிவுகள் 5, பெட்ரோல் வழங்கு நிலையங்கள் 3 என்ற எண்ணிக்கைகள் அமைந்த விற்பனை பிரிவுகள் மூலம் தரமாகவும், விலை குறைவாகவும் சென்னை வாழ் மக்களுக்கு வழங்கி வந்த நிலையில்,

தற்சமயம் கடந்த ஜூலை மாதம் 2026க்கு பிறகு, நிறுவனத்திற்கு வந்த புதிய கூடுதல் பொறுப்பு செயலாட்சியர் திருமதி. ஆர்.வி.காவேரி அவர்கள் தனது பொறுப்பு தெரியாமல் இந்நிறுவனத்தின் அலுவலர்களாக இருந்து வரும் திருமதி. ஜி.தெய்வநாயகி மற்றும் கு. தமிழ்வாணன் என்ற துணை அலுவலர்களோடு இணைந்து நிர்வாக சீரழிவு ஏற்படுத்துகிறார். இதனால் விற்பனை பெரும் வீழ்ச்சியாகி பணியாளர்களுக்கு ஊதியம் தர முடியாத அவல நிலை மிக விரைவில் வரும் என்ற நிலையுள்ளது.

இது குறித்து மனு கொடுத்தும், நடவடிக்கை கோரியும் எந்த நடவடிக்கையும் எடுக்காமலும் தமது இஷ்டத்திற்கு கலந்தாய்வு எதுவும் செய்யாமல் 450 பணியாளர்களுக்கும் மேற்பட்டவர்களுக்கு பணி இடமாறுதலை தினசரி செய்து வருவதும் நிறுவனத்தின் வளர்ச்சிக்கென எந்த முயற்சியும் செய்யாமல் கோப்புகளை தேக்கம் ஆக்கி நிர்வாக சீரழிவு செய்வதும் விற்பனையில் ஆர்வம் காட்டாமல் டி. யு. சி.எஸ் விற்பனை மையத்தினை வங்கி போல் செயல்பட வைக்க நினைப்பதும் கூடுதல் பொறுப்பு செயலாட்சியரின் தினசரி பணியாக இருந்து வருகிறது.


இதனால் பெருமளவில் நிதி நலிவை நோக்கி போகும் டி.யு.சி.எஸ் நிறுவனத்தை காத்து தொழிலாளர்களின் நலன்களை காத்திட டி.யு.சி.எஸ். திராவிட தொ.மு.ச. சார்பில் பேரவையின் அனுமதியோடு 03.09.2026 அன்று மதியம் 01.30 மணி முதல் 02.30 மணி வரை தலைமையக வாயிலில் கண்டன கூட்டம் நடைபெற்றது.

இந்த டி.யு.சி.எஸ். தொ.மு.ச. சார்பில் நடந்த கண்டன வாயிற்கூட்டம் தொ.மு.ச. மாவட்ட கவுன்சில் பொதுச்செயலாளர் சுந்திரமூர்த்தி தலைமையில் டி.யு.சி.எஸ். தொ.மு.ச. செயலாளர் இராஜன் சாமிநாதன் முன்னிலையில் நடந்தது. இதில் எம்.இராஜசேகர், என்.பிரபாகரன், கே.கதிரவன், கே.மலர்மன்னன், முத்துசெல்வன், கோகுல், பேபி ஷாலினி, சுமித்திரா, சதிஷ் குமார், மருதமலை, கஜேந்திரன், லோகநாதன், சரவணன், முருகேசன் உள்ளிட்டஏராளமான தொ.மு.ச. வினர் கலந்து கொண்டனர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**புலவர் க.முருகையன்**
**செப்டம்பர் 6 (1997)**



**இளமைப் பருவத்திலேயே தந்தை பெரியாரின் கொள்கையில் ஈர்க்கப்பட்டு திராவிடர் கழகத்தில் பணியாற்றி, பின்னர் கழகம் துவங்கியதும் தன்னை இணைந்துக்கொண்டு, ஆசிரியராக பணியாற்றிக் கொண்டே கழகப் பணியாற்றியவர்.**

**தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரின் நன்மதிப்பை பெற்றவர்.**

**தலைவர் கலைஞர் அவர்களுடன் கல்லக்குடி போராட்டத்தில் கலந்து கொண்டவர்.**

**1967இல் திருவையாறு சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, திறம்பட பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**கழகம் நடத்திய அனைத்து அறப்போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

இடைநிலை ஆசிரியர்களின் ஊதிய முரண்பாடுகளை அகற்றி

# ஊக்க ஊதிய உயர்வினை உடனே வழங்கிடுக!

## தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்ற மாநிலப் பொதுச்செயலாளர் நா.சண்முகநாதன் அறிக்கை!

புதுக்கோட்டை, செப்.6-

இந்திய குடியரசின் முன்னாள் தலைவரும், தலைசிறந்த கல்வியாளருமான டாக்டர் இராதாகிருஷ்ணன் பிறந்தநாளை ஆசிரியர் தினமாகக் கொண்டாடி மகிழும் ஆசிரியப் பெருமக்கள் அனைவருக்கும் தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றத்தின் மாநில பொதுச்செயலாளர் மன்றம் நா.சண்முகநாதன் தனது ஆசிரியர் தின நல் வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் விடுத்துள்ள வாழ்த்து செய்திக் குறிப்பில் கூறியுள்ளதாவது:

மாணவர்களின் சமூக சிந்தனையை வடிவமைக்கும் சிற்பியாக செயல்படுபவர்கள் ஆசிரியர்கள் ஆவார்கள். மாணவர்களின் கல்வி, ஒழுக்கம், எதிர்காலத்தை வடிவமைப்பதில் முக்கிய பங்காற்றுபவர்கள் ஆசிரியர்களே. அவர்களுக்கு நன்றி செலுத்தும் வகையில் நடைபெறும் இந்நன்னாளில் மாணவர்களின் எதிர்காலத்தை உருவாக்கும் ஆசிரியர்களின் தியாகத்தை, உழைப்பை நாம் அனைவரும் போற்றுவோம்.

ராதா கிருஷ்ணன் விருது பெற்ற விருதாளர்



களை வாழ்த்துவோம். ஆசிரியர்களின் நீண்ட நாள் நிறைவேற்றப்படாமல் உள்ள கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்று வதற்கான அறிவிப்பினை தமிழக அரசு வெளியிட்டு ஆசிரியர்களின் வாழ்வில் ஒரு வசந்தத்தினை ஏற்படுத்தி தர வேண்டும்.

குறிப்பாக ஆசிரியர் தகுதித் தேர்வில் இருந்து முழு விலக்கு பெற துரிதமான நடவடிக்கை எடுத்திட வேண்டும். இடைநிலை ஆசிரியர்களின் ஊதிய முரண்பாடுகளை அகற்றிடவும், ஆசிரியர்களின் ஊக்க ஊதிய உயர்வினை வழங்கிடவும் தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சியில் முக்கிய பங்காற்றும் ஆசிரியர்களுக்கு தமிழக அரசு ஆசிரியர் தின விழாவில் முன்வர வேண்டும்.

இவ்வாறு நா. சண்முகநாதன் கோரிக்கை விடுத்துள்ளார்.



தூத்துக்குடி மாவட்டம் எட்டையாபுரம் ஸ்ரீ வெங்கடேஸ்வரா பல்கலைக்கழகம் வேளாண்மை அறிவியல் கல்லூரியில் இறுதி ஆண்டு பயிலும் மாணவிகள் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி.மார்க்கண்டேயனை சந்தித்து வேளாண்மை செய்முறை பணி அனுபவ திட்டம் குறித்து ஆலோசித்தனர். மேலும் விளாத்திகுளம் அம்பாள் கோசாலையில் மாணவிகளின் நடைமுறை பயிற்சிக்காக மாதிரி மற்றும் பரிசோதனை பயிர்களை சாகுபடி செய்வதற்கு பயன்படுத்திக் கொள்ளுமாறு ஆலோசனை செய்தார்.